
வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
குலாப்பத்து
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.

# வேதாத்திரியப் பார்வையில்

# திருவாசகத்தின் குலாப்பத்து

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

(குலாப் பத்து - அனுபவம் இடையீடுபடாமை தில்லையினது விளக்கத்தைக் குலாத்தில்லை எனச் சிறப்பித்துக் கூறும் பத்துப் பாடலாதலின், இது குலாப்பத்து எனப்பட்டது.)

அனுபவம் இடையீடு படாமை - சிவானந்த அனுபவம் தடைப்படாதிருத்தல். (தில்லையில் அருளியது - கொச்சகக் கலிப்பா)

இதனுள்ளே


1. கடவுளை தேடி
2. பிறவாமை வேண்டும்
3. வினைப்பதிவுகளை வெல்லலாமா?
4. பேரறிவாகிய பிம்பமே மனிதன்
5. யார் கடவுளின் அருள் பெற்றவர்கள்...
6. பற்றற்ற நிலை வேண்டும்.(நிலையாமை)
7. கொள்ளையாசை கொள்ளை போய்விட்டது.
8. மகாபாரதம் கதையா? ஐம்புலன்கள் கதையா?
9. கருமையம் எனும் தெய்வீகப் பெட்டகம்
10. முக்தியும் நரகமும்


## 1.கடவுளை தேடி

ஆத்திகர்களால் கடவுள் என்று கூறப்படும் மெய் பொருளை கண்டு விட துடித்த விவேகானந்தர், இறைவனை காண முடியுமா, நேருக்கு

நேர் சந்திக்க முடியுமா, என்ற கேள்விகளுடன் பல பெரியவர்களை சந்தித்தார்.

அப்படி அவர் சந்தித்தவர்களில் முக்கியமானவர் பிரம்ம சமாஜத்தினால் மிகவும் மதிக்க பட்ட தேவிந்திரநாத் தாகூர்.

அவரை கண்டவுடன் துணிச்சலாக நீங்கள் கடவுளை பார்த்திருக்கிறீர்களா என்று கேட்டார். அந்த கேள்வி மகரிஷி என்று அழைக்கப்படும் தேவேந்திரநாத் தாகூரை ஆச்சர்ய பட வைத்தது. அதற்கு நீ ஆழ்ந்து தியானம் செய்தால் மட்டுமே அதற்குரிய பலனை அனுபவிப்பாய் என்று பதில் சொன்னார்.

கடவுளை கண்டவர்கள் யாராவது இருக்கிறார்களா என்பதை தெரிந்து கொள்ள விவேகானந்தருக்கு இருந்த ஆர்வம், கடைசியாக அவரை ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் கொண்டுபோய் சேர்த்தது.

“நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா?” என்ற கேள்வியை, பல நாட்களாக. மாதங்களாக தம்முள் முகிழ்த்துக் கொண்டிருந்த கேள்வியை நரேந்திரர் (விவேகானந்தரின் இயற்பெயர்) குரு தேவர் ராமகிருஷ்ண பரமஹம்சரைத் தரிசித்ததும் கேட்டார்.

எப்.ஏ. தேர்வு எழுதி முடித்த நரேந்திரர் “மில்” போன்ற மேலைநாட்டு தர்க்க நூலாசி சரயர்களின் எழுத்துக்ளில் ஊன்றினார்.

பின்பு கார்டேயின் “நான் சிந்திக்கிறேன் அதனால் வாழ்கிறேன்” என்ற நூலின் சாரத்தை உணர்ந்தார்.

நாத்திக வாதத்தில் சிறந்தவரான ஹயூமின் வாதங்க ளைத தெளிவுபடக் கற்றார். சார்லஸ் டார்வினின் பரிணாமக் கொள்கை, காம்டு. ஹெர்பர்ட் ஸ்பென்சர் போன்றவர்கள் தத்துவங்களைத் தேர்ந்தார். அவை அவருக்குத் தெளிவைத் தரவில்லை.



மேலும் பல அறிஞர்களின் கருத்துக்களை யெல்லாம் ஊன்றி ஆராய்ந்தார். உடற்கூறு பற்றிய அறிவைப் பெறுவதற்காக பல நூல்களைப் படித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் வந்தார்.

இத்தனையையும் அறிந்த பின்பும் அவர் நெஞ்சம் ஆர்ப்பரிக்கும் கடலாகவே இருந்தது. அமைதிகாண முடியவில்லை.

எது உண்மையானது, சாஸ்வமானது, அதை அறிய வேண்டுமென்ற தாகத்துடன் நரேந்திரர் குருவேரிடம் "கடவுளைக் கண்டதுண்டா?" என்று கேட்டார்.

குருதேவர் நரேந்திரரின் ஆத்ம தாகத்தைத் தணிவிக்கும் குளிர்ச்சி பொருந்திய குரலில் கூறலானார்.

"குழந்தமாய் இறைவனை நான் கண்டிருக்கி றென். என் எதிரே உன்னைக் காண்பதை விடவும் அகக்கண்ணால் அவரை தெளிவாகவே கண்டிருக்கிறேன். அவரோடு பேசலாம். கேட்கலாம், நீ விரும்பினால் உன்னாலும் கடவுளைக் காண முடியும்" என்றார் குருதேவர். எரையும் ஏற்காத நரேந்திரர் குருதேரை ஏற்றுக் கொண்டார்.

கடவுளைக் கண்டதுண்டா என்று கேட்ட நரேந்திரர் உள்ளத்தில் குருதேவரின் அருளால் நம்பிக்கை உண்டாயிற்று.

நரேந்திரரின் நெஞ்சில் படர்ந்திருந்த சந்தேகங்கள் அகன்றன. பாசி படர்ந்த குளம் தூய்மையாயிற்று. இவரே தமது குருநாதர் என்று தீர்மானித்து விட்டார் நரேந்திரர்.

"தேடும் பொருளும் சிவன்கழலே" என்கிறது திருவாசகம்.

ஓடுங் கவந்தியுமே உறவென்றிட்டு உள்கசிந்து
தேடும் பொருளும் சிவன்கழலே எனத்தெளிந்து
கூடும் உயிரும் குமண்டைஇடக் குனித்து அடியேன்
ஆடுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 559

- திருவோடும் கோவணமும் மிகை என்று கருதி,
- உள்ளம் உருகித் தேட வேண்டிய பொருள் சிவனது திருவடியே என்பது அறிந்து. விளங்கும் திலலையை ஆளும் ஆடல்வல்லானைப் பற்றிக் கொண்டு,
- எனது உயிரும் அது தங்கி இருக்கும் உடம்பும் ஆட, நான் கூத்தாடுவேன்.

அருளிருளாய் நிறைந்த சிவம் பாதம் போற்றி என்று வான்மீகர் கூறுகிறார்!

மழை பெய்யும் காலங்களில் மழைகால் இறங்குவதை தூரத்தில் மேகத்தை நோக்கி காட்டுவார்!

அதேபோல் போல் வான்காந்தமாய் உள்ள இறையின் தன்மாற்றம், நாம் பக்குவம் அடையும் போது நம் தலையில் சீவகாந்தமாக உட்புகுவது இறைவன் திருவடிகள் / கழல்கள்/ தாள் என்று கூறும் சொற்கள்!

அவை சீவகாந்தமாக தன்மாற்றம் அடையும் சில்லென்று பணிபடர்வது போன்ற உணர்வே அமிர்தம்! அது உள்ளே எப்போதும் இருந்து நம்மை வழிநடத்த வேண்டும் என்று "வாழ்க" என்று கூறுகிறோம்!

ஒரு குழந்தைக்குத் தகப்பன் யார்? என்ற உண்மையை பொதுவாகத் தாயார் அறிந்துள்ள நிலையைப் போன்று, மற்றவர்களால் அறிந்து கொள்ள முடியாது.

.

இது போன்று ஒரு தத்துவத்தைச் சந்தேகமற, மாறமுடியாத, மாற்ற முடியாத வகையில் அறிந்து கொண்ட திட நிலை "ஞானம்" எனப்படும்.

.

வளர்ப்போர் சொல்லிக் கொடுத்ததைத் திருப்பித் திருப்பிச் சொல்லும் கிளியை போன்று, தன் தாயார் சுட்டிக் காட்டிய ஒருவன் தான் தனது தகப்பன் என்று உறுதியாகச் சொல்லும் மகனின் மனோ நிலையோர்களால் எழுதப்பட்டுள்ள கருத்துக்களே சரியென நம்பி உறுதி கொண்டிருக்கும் நிலையும் இம்மாதிரியே.

.

கற்பனை வேகத்தால் இயற்கையை மறந்து, சமூகத்தின் அமைப்பையும், மக்களின் எண்ணம் செயல்களால் விளைந்து வரும் விளையப் போகும் நிகழ்ச்சிகளையும் மறந்து, உடலளவின் தேவையையும் அறிவுக்கு அந்தச் சமயப் பொருத்தத்தையும் ஞாபகத்தில் கொண்டு, புலனறிவின் எல்லையிலேயே மட்டும் விரிந்து, மயக்க நிலையில் எண்ணிச் செயலாற்றுவது "மாயை" எனப்படுகிறது.

.

எள்ளுக்குள் எண்ணையைப் போன்று பிரபஞ்சம் எங்கும் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்து நின்று இயங்கும் ஆன்மா, ஜீவன், கடவுள், இயற்கை, சக்தி என்று பலவாறாகச் சொல்லப்படும் அரூப சக்தி நிலையை அறிவால் அறிந்து, வாழ்வில் அமைதி பெறுவதே, அறிவில் தெளிவு பெறுவதே, "முக்தி" எனப்படும்." என்கிறார் வேதாத்திரி மகரிஷி.

.

"மெய்ப்பொருளாக இருப்பது இறைஆற்றல்;
அதனுடைய அசைவாக இருப்பது பரமாணு.
அதனுடைய கூட்டமாக இருப்பது தோற்றம்"".(வேதாத்திரியம்)

.

.

"எந்தப் பொருளைப் பார்த்தாலும் 'தோற்றம்,
அணுக்கூட்டு, பரமாணு, அதனுள் மெய்ப்பொருள்,'
என்று பார்க்கப் பழகிக் கொள்ளுங்கள்".(வேதாத்திரியம்)

.

“அறிவு அறிவுக்கு அடிமையாவதே பக்தி.
அறிவை அறிவால் அறியப்பழகுதல் யோகம்.
அறிவை அறிவால் அறிந்த நிலையே முக்தி.
அறிவை யறிந்தோர் அன்பின் அறமே ஞானம். (ஞாக.பா.1356).

.

ஞானம் தேடும் பக்தர்கள் வேதாத்திரியம்

“தேடுகின்ற பொருள் என்ன, ஏன் நமக்கு,
தெரிந்தவர் யார், கிடைக்குமிடம்எது, ஈதெல்லாம்
நாடுகின்ற வழக்கம் சிலபேரே கொள்வார்
ஞானமதைத் தேடும் சிலர் இதை மறந்து
ஓடுகின்றார் உருக்கமுடன் தேடுகின்றார்;
ஒடுங்கி நின்று அறியும் அதை விரிந்து காணார்
வாடுகின்றார்; உளம்நொந்து இருளைத்தேட
விளக்கெடுத்து போவதைப்போல
முரண்பாடன்றோ”.(ஞாக.பா.1438).

.

.

“வணங்கி வந்தேன் கற்பனையால் தெய்வத்திற்கு
வழக்கமாய் தொடர்ந்து வந்த பழக்கத்தாலே,
வணங்குபவன் உரியபொருள் வரும்பயன்கள்
வணங்கும் போதாராய்ந்தேன், வணக்கம்விட்டேன்
வணங்குகிறோம் ஒன்றை நமக்கு உயர்ந்ததாயும்
வாழ்வளிக்கும் ஒன்றாயும் நினைத்துக்கொண்டு.
வணங்குபவன் வலிமைபெற்று உயர்வடைந்தால்
வாழ்வினிலே கடமைசெயல் உயர்வாய்க் காணும்” (ஞாக.பா.1337).

.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.வாழ்க வையகம்.

# 2.பிறவாமை வேண்டும்

'இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்.

]பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும், இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
இறைவா நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.'

என்பது காரைக்கால் அம்மையார் இறைவனிடம் வேண்டிப் பாடிய தமிழ்ச் சுவை நிறைந்த பாடல். பிறவாமையையும் ஒருவேளை மறுபடிப் பிறக்க நேர்ந்தால் சிவபெருமானை என்றும் மறவாமையையும் வரமாகக் கேட்கும் பாடல் இது.

'பிறவா வரம் தாரும் பெம்மானே பிறந்தாலுன் திருவடி மறவா வரம் தாரும் மாநிலமேலினிப் பிறவா வரம் தாரும் பெம்மானே....'

என்று அண்மைக்காலத்தில் எழுதப்பட்ட பாபநாசம் சிவன் கீர்த்தனை, காரைக்கால் அம்மையாரின் வேண்டுதலைத் தானும் வழிமொழிந்து எழுதிய கீர்த்தனைதான்.அருணகிரிநாதர் அவிநாசித் திருத்தல முருகப் பெருமானைப் பற்றித் தாம் எழுதிய திருப்புகழில் இறவாமல் இருப்பதையும் பிறவாமல் இருப்பதையும் ஒருசேர வேண்டுகிறார்:

''இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத்
தருவாயே!
குறமாதைப் புணர்வோனே! குகனே!
சொற் குமரேசா
அறநூலைப் புகல்வோனே! அவிநாசிப்
பெருமாளே!' '

ராமலிங்க வள்ளலாரும் பிறவாமை வழியை உணராதிருக்கும் மானிடரை எண்ணி இரங்குகின்றார்.

'ஆயாமை யாலே நீர் ஆதி அனாதி
ஆகிய சோதியை அறிந்துகொள் கில்லீர்
மாயாமை பிறவாமை வழியொன்றும் உணரீர்

மறவாமை நினையாமை வகைசிறி தறியீர்
காயாமை பழுக்கின்ற கருத்தையும் கருதீர்
கண்மூடித் திரிகின்றீர் கனிவொடும் இரப்போர்க்கு
ஈயாமை ஒன்றையே இன்துணை என்பீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே.'

வள்ளலார் ஐம்பது ஆண்டுகளும் ஐந்து மாதங்களும் இவ்வுலகில் உடல் தரித்து வாழ்ந்தார். பிறவா நிலையை அடைய விரும்பிய அவர் தன் உடலை பிரபஞ்சத்தில் கரைத்துக் கொண்டார் என்று சொல்லப்படுகிறது.

தம் வாழ்வின் கடைசி மூன்று மாதங்கள் அவர் மோனத்தில் ஆழ்ந்தார். 1874 ஜனவரி முடிவில் மூன்று மாத மோனத்தைத் துறந்து பேசலானார்.

பல முக்கியமான அறிவுரைகளை அன்பர்களுக்கு வழங்கினார். படுக்கையில் சாய்ந்து கொண்டார்.

தமது உருவம் எவருக்கும் புலப்படாதிருந்து சில காலத்திற்குப் பிறகு பிரணவ தேகமாகி குருநிலை பெற்று சித்துகள் புரியும் என்று அவர் குறிப்பிட்டதாய்ச் சொல்கிறார்கள்.

அவர் கட்டளையிட்டபடி, அறைக் கதவுகள் மூடப்பட்டன. அறையில் காற்றுப் போவதற்கும் இடமில்லை.

சிறிது காலம் சென்றபின் கதவைத் திறந்தபோது அங்கு வெறும் வெளிதான் இருந்தது. வள்ளலாரது உருவத்தின் எந்த ஒரு சுவடும் அங்கே தென்படவில்லை. வள்ளலார் தாம் சொன்னவாறே இந்தப் புவியெங்கும் கலந்து நிறைந்துவிட்டார்.

துடியேர் இடுகு இடைத் தூய்மொழியார் தோள்நசையால்
செடியேறு தீமைகள் எத்தனையும் செய்திடினும்
முடியேன் பிறவேன் எனைத்தன்தாள் முயங்குவித்த
அடியேன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 560

- என்னைத் தனது திருவடியில் சேர்த்துக் கொண்ட தில்லையை ஆளும் ஆடல்வல்லானைப் பற்றி நிற்கிறேன்.
- அதனால் உடுக்கை போன்ற நுண்ணிய இடையினையும்,
- தூய்மையான சொற்களையும் பேசும் மகளிரது தோளைத் தழுவும், விருப்பத்தால் பாவம் சேர்வதற்குக் காரணமான, தீய வினைகள் எவ்வளவு செய்தாலும் (அது கணக்கில் கொள்ளப்படமாட்டார்)
- இனி இறக்க மாட்டேன். பிறக்கவும் மாட்டேன்.

## பிறவிக் கடல் – வேதாத்திரியம்

"தன்முனைப்பு, பழிச்செயல்கள் பதிவு, மாயை,
தளைமூன்றும்மனிதஉயிர்க் களங்க மாகும்.
வன்முறையில் இவைஅறிவைப் புலன்கள் மூலம்
வழுக்கிப் பிறவிக்கடலை நீள வைக்கும்,
உன்வயமாம் அகத்தவத்தால், அகத்தா ராய்வால்,
உண்மையுணர்ந்து அறுகுணத்தைச் சீரமைத்து,
இன்முறையில் உயிர்கட்குத் தொண்டு ஆற்றி,
இறைநிலையில் உனை இணைக்கத் தூய்மை உண்டாம்.

பிறப்பும் இறப்பும் உருவ தோற்றமான உடலுக்கே அன்றி, அரூபமாக இருக்கும் இயங்கும் உயிருக்கு அல்ல.




அணுக்களின் எழுச்சி, கவர்ச்சி என்ற இயக்கத்தால் ஏற்படும் அவைகளின் கூடுதல், பிரிதல் என்ற நிகழ்ச்சிகளே எல்லா உருவங்களின் தோற்ற, மறைவு சம்பவங்களாகும். தொடர்ந்து நடைபெற்று வரும் அணுக்களின் கூட்டு இயக்கத் தன்மாற்றச் சிறப்புகளின் அவ்வப்போதைய நிலைகளைக் காட்டுவதே பொருட்கள், ஜீவராசிகள்

இவைகளின் உருவ அமைப்புகளும் அவைகளின் பல்வேறு இயக்கங்களும் என்பது தெளிவான விளக்கம்.

உயிர் என்பது அரூபமனாது. அது அணுவுக்கு அப்பால் மௌனமாக உள்ளது.

அதுவே அணுவில் இயக்கம், ஒலி, ஒளி இவைகளாக இருக்கிறது. ஜீவ ராசிகளின் புலன்கள் கூடுதலுக்கேற்பவும், தேவையுணர்வு, அனுபோகம், இன்ப துன்பம் என்பனவான அனுபவங்களுக்கு ஏற்பவும் அதே சக்தி அறிவாக இருக்கிறது.

இந்தச் சக்தி எங்கும் நிறைந்து என்றும் உள்ளது. இந்தப் பேராதார நிலையாகிய உயிருக்கு பிறப்பும் இல்லை. இறப்பும் இல்லை.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆந்தமாக வாழ்வோம்.வாழ்க வையகம்.

## 3.வினைப் பதிவுகளை வெல்லலாமா?

பகவான் ரமணருக்கு புற்றுநோய்....
அது கர்மவினைகளால் வந்தது என்பது அவருக்கு விளங்கி விட்டது.

வினைகள் இருவகை.

காலத்தால் பரிகாரங்களுக்கு உட்பட்டு வேறு விதமாக மாறுபவை ஒரு விதம்.



அப்படி மாறாமல் உடம்பிலேயே தங்கி, உடம்பை மொத்தமாய் அழிப்பது ஒரு விதம்.

புற்று இரண்டாவது வகை.

உடம்பை ஜெயித்த ரமணர் இதைப் புரிந்து கொண்டார்.

எனவே அதை அனுபவித்து தீர்ப்பதே சிறந்தது என்று கண்டு அந்த வழியை, இன்பத்தை அனுபவிப்பது போல அனுபவித்தார்.

எந்த ஒரு துன்பமும் இல்லாமல் போக உள்ள ஒரே வழி, அதை மனதார ஒப்புக் கொண்டு அதை அனுபவிப்பது.

ரமணரும் புற்று வலியை அனுபவித்தார்.

அனுபவிக்க அனுபவிக்க அந்த கர்மக் கணக்கு கழிவதை உணர்ந்தார்.

பல இலட்சம் பக்தர்கள் தங்கள் துன்ப அலைகளால் அவருக்குள் உருவாக்கியது தான் புற்று.

அவரால் பக்தர்களின் கர்ம துயரங்களை பெற்று கொள்ள முடிந்தது. தாங்கிக் கொள்ளவும் முடிந்தது.

அது மட்டுமல்ல.
அவருக்கு அதற்கான மருத்துவ சிகிச்சை
செய்த போது, அவர் மயக்க மருந்து உட்கொள்ளவில்லை.

மனோசக்தியின் உச்சத்தில் அவதார
புருஷராகவே இருந்தார்.

“தீய வினைகள் எவ்வளவு செய்தாலும் (அது கணக்கில் கொள்ளப்படமாட்டார்)” என்று திருவாசகம் பாடுகிறது.

என்பு உள் உருக்கி இருவினையை ஈடழித்துத்
துன்பம் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்பு உள்ள வற்றை முழுது அழிய உள்புகுத்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 561

- அன்பினால் என் உள்ளத்துள் புகுந்து. எலும்பு உருகவும்,
- இரண்டு வினைகளும் அழியவும்.
- துன்பங்கள் அனைத்தும் தொலையவும்,
- இரண்டு இரண்டாக வரும் பற்றுக்கள் அனைத்தும் தூய்மை அடையவும்,
- என்று இவ்வாறு முன்பு இருந்த அனைத்தும் அழியுமாறு செய்த. தில்லையை ஆளும், ஆடல் வல்லானைப் பற்றிக் கொண்டேன்.

## பற்று அற்ற வாழ்வுக்கு வழி காட்டுகிறது வேதாத்திரியம்.

"பற்றற்று எல்லோரும் வாழ வென்றால்,
 பலர் கூட்டு முயற்சியினால் அன்றி ஆகா.
உற்றுற்று ஆராய்ந்தேன் உறக்கம் விட்டும்.
 உலக சமாதானமது, பாசம் பந்தம்
அற்றஒரு புது புரட்சிகர திட்டத்தால்
 அன்றி அதுகிட்டாது நிலைத்திடாது
கற்றவர்கள் ஆராய்வீர்! நுணுக்க மாகக்
 கருத்தினிலே எழும் சிக்கல் எடுத்துரைப்பீர்." (ஞாக.பா.966)

தனி மனித வாழ்வு இனிமையாகவும், சமுதாயம் வளம் உயர்ந்தும் இருக்க வேண்டும்.

ஆனால் பல பிறவிகளில் தொடர்ந்து வந்த பழக்கத்தால் தனி மனிதர் பொருள் உடைமையால் பொருள் பற்றும் மக்கள் பாசமும் ஏற்பட்டு, மனிதர்களில் பிரிவுகள் உருவாகி இனிமை கெட்டு விட்டது.

பற்றுக்களிலிருந்து விடுபட்டு மனிதன் ஆன்ம சுதந்திரத்துடன் வாழ வேண்டும்.

பலரது கூட்டு முயற்சியினால் தான் பற்றிலிருந்து விடுபட முடியும்.

கூர்ந்து கவனித்து, தூக்கத்தையும் தவிர்த்து ஆராய்ந்தேன்.

பாச பந்தம் இல்லாத ஒரு புதிய புரட்சிகரமான திட்டத்தால் அன்றி உலக சமாதானம் என்பது கிடைக்காது. நிலைக்காது.

கற்றறிந்து அறிஞர் பெருமக்கள் பாசபந்தம் அற்ற வாழ்வை நடைமுறைப்படுத்துவது பற்றியும், அதனால் விளையும் நலன்களையும் எதிர் கொள்ள வேண்டிய நுட்பமான சிக்கல்களையும், அதற்கான தீர்வுகளையும் எடுத்து உரைக்க வேண்டும்.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.வாழ்க வையகம்.

## 4.பேரறிவாகிய பிம்பமே மனிதன்

மனிதனின் சரித்திரம் பற்றி என்ன சொல்கிறது வேதாத்திரியம். பிரம்மமே மனிதனாக வந்துள்ளது என்பதை சொல்கிறது.

பூரணப் பொருளே புதுமை யடைந்து
ஆரணமான அணுவாய் விரிந்து
அணுவின் கூட்டம் இயக்கம் பக்குவம்
அசைவாய் இசைவாய் அண்ட கோடிகளாய்
ஓரறிவினம் முதல் ஐயறிவினம் வரை
ஊனாய்உயிராய் உருவ பேதங்களாய்
தானாய் விரிந்த தத்துவமாகிய
சுவைமுதல் ஐந்தையும் சுகிக்கவும் அறியவும்

கர்ம ஞானக் கருவிகள் பெற்று
    அறிந்தும் வாழ்ந்தும் அரூப நிலையாம்

ஆதி நிலையை அறிந்து முடிவுற
    எழுந்த வேகத்தால் எடுத்த வடிவம்
அறிவின் நிலைகள் ஐந்துக்கும் அப்பால்
    அறிவின் உயர்வாம் ஆறாம் நிலையில்
வந்து பிறந்து வாழ்வதே மனிதன்
    சிந்தனை அறிவின் சிறப்பே மனிதன்
யூகம் யுக்தி யோசனை யோடு
    வேகம் நுட்பம் விளைவதற் குரிய
அறிவின் நிலையே ஆறாம் நிலையாம்
    அவ்வித அறிவின் ஆட்சியே மனிதன்

இந்த உலகில் மனிதன் தோன்றிய
    அந்த நாள் முதல் இன்று வரைக்கும்
வழி வழியாக வாழ்ந்த மனி தர்கள்
    வாழ்க்கை வசதிகள் தேடிய முறையும்
அறிவின் மேன்மை அடைந்த முறையும்
    நெறியில் நிலைத்த நினைப்பின் சக்தியால்
ஐம்புலன் அறிவால் ஆராய்ச்சி தன்னால்
    நம்பிய வழியில் நாட்டம் செலுத்தி
பார்த்தும் கேட்டும் பழக்கத் தாலும்
    தானும் அறிந்து தக்க பயன் பெறும்
செவ்விய அறிவின் சிறப்பே மனிதன்.

திவ்விய உருவின் திறமே மனிதன்
    ஒருவன் அறிவில் உணர்ந்த எதையும்
உலகோர் அனைவரும் ஒத்தனுபவிக்க
    பரவச் செய்து பலன் விளைவிக்கும்
அற்புத அறிவின் சிற்பமே மனிதன்
    தனித்த மனிதன் தான் விரும்பிய
அனைத்தையும் முடிக்க அவர் சரீர
    சக்தி மாத்திரம் தாங்கா விட்டால்

யுக்தி யோசனை யூகம்கொண்டு

அப்பொருள் அடைய அச்செயல் முடிக்க
இப்புவியிலுள்ள எத்தனைப் பேரையும்
ஒன்றாய்த் திரட்டி ஒற்றுமை செய்து
நன்றாய் முடிக்க நல்லறிவாகிய
உயர்ந்த சக்தியாம் ஒளியே மனிதன்
ஊனுடைய சிறந்த உருவே மனிதன்
மனிதன் நினைத்த செயல்கள் தம்மை
அனுபவக் கருவிகள் அறிவின் கருவிகள்
இத்தகைப் பத்து இந்திரியங் களால்
சித்தப்படியே செய்து முடிப்பான்.

இந்திரியங்களின் இயக்கச் சக்தி
எல்லைக்குட்பட் டிருப்பத னாலேயே
அந்தச் சக்தியை அதிகப்படுத்த
அறிவைச் செலுத்தி ஆராய்ச்சி செய்து
உடற்கருவி கட்கு உபகருவிகளை,
இடத்திற்கேற்ப ஏற்படுத்திக் கொள்ளும்
வல்லமை அறிவின் வடிவமே மனிதன்,
நல்ல அமைப்புகள் உள்ளவன் மனிதன்
ஆராய்ந் துணரும் அறிவின் உயர்வால்
ஊரார் உலகோர்உள்ளம் விரும்பும்
இச்சையயை அறிந்து இரக்கங் கொண்டு
அச் செயல் முடிக்க அன்பில் பரவி
ஆர்வம் கொண்டு அறிவால் வகுத்து
சோர்வில் லாமல் சொல்லால் செயலால்
பலரின் ஏக்கம் முடிக்கத் தக்க
உலகில் உயர்ந்த உருவமே மனிதன்
ஓரறி வாகிய உருவம் முதலாய்
ஆறறி வாகிய அந்நிலை வரைக்கும்
அனந்தம் கோடி ஆகிய உருவில்
நினைந்த ஒன்றையோ நேரும் பலதையோ

எ்வவுரு இயல்பும் இனிதே உணர்ந்து

அவ்வியல்பொக்க அதையனுப விக்கவும்
தன்னிட அறிவைத் தலைமை யாக்கி
நிர்வகித்து நினைந்தவை முடிக்கவும்
அமைந்த அறிவின் ஆட்சியே மனிதன்
சமைந்த அறிவின் சக்தியே மனிதன்
ஆன்மா அறிவின் ஆறாம் நிலையில்
தான் புகுந்ததால் தரித்த ரூபம்
மனிதனாகிய மகத்துவ மாச்சு
இனியவன் கடமையை உணர்வதே சிறப்பு,

இரத்தச் சுவாசச் சுழலாய் இயங்கும்
அத்தனை கோடி உயிரினம் யாவும்
இன்ப துன்பம் இரண்டினுட் பட்டே
என்றும் இருப்பது ஏன்? இவற்றிற்கு
இருப்பிடம் எங்கே? என்றா ராய்ந்து
விருப்பும்வெறுப்பும் எவையெனக் கண்டு!
அறிவே இவையாய்த் தோன்றி இயங்கி
அவைதாம் மாறிடும் தன்மையும் கண்டு
அத்தகைய அறிவின் தத்துவ மறிய
அறிவை ஒன்றி அறிவில் நிறுத்தி

அறிவையே அறிய ஆழ்ந்து ஆழ்ந்து
பொறிபுலன் அடக்கிப் பொறுமை அடைந்து
ஒன்றி ஒன்றி ஒருவனாய் நின்று
உட்புறம் நோக்கி உணர்ந்து முடிவில்
உருவம் அனைத்திலும் ஊடே நிறைந்த
அருவ நிலையும் அவ்வவ் வுருவின்
அமைப்புச் சிறப்பும் இயக்க மொப்ப
அரூப இயக்கச் சிறப்பும் உணரும்
பேரறிவாகிய பிம்பமே மனிதன்
அனைத்தும் அறிந்துபின் அறிவையு மறிந்ததால்
ஆதி நிலையையும் அறிந்தே முடித்தான் !!!(ஞாக.பா.290)
அருட்தந்தை. வேதாத்திரி மகரிஷி

குறியும் நெறியும் குணமும் இலார் குழாங்கள்தமைப்
பிரியும் மனத்தார் பிரிவரிய பெற்றியனைச்
செறியும் கருத்தில் உருத்து அமுதாம் சிவபதத்தை
அறியுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 562

- ஒரு குறிப்பும், சமயநெறியும், பாசங்களும், ஆகிய இவற்றிலிருந்து விலகி நிற்கும், எண்ணம் உடைய அடியாரை, விட்டுப் பிரியாத தன்மை உடையவனை.
- அன்பு மிகும் அவர் உள்ளத்தில் உருவம் கொண்டு,
- வெளிப்படும் அமுதமயமாய் விளங்கும், தூய நிலையில் இருப்பவனை.
- எல்லாவற்றையும் அறியும் தன்மை உடைய, தில்லையை ஆளும், ஆடல் வல்லானைப் பற்றிக் கொண்டேன்.

அவன் யார்? நீயார்? பிரிவேது? வேதாத்தரியம்

அவனின் இயக்கம் அணுவாற்றல்
அணுவின் கூட்டுப் பக்குவம் நீ
அவனில் தான் நீ உன்னில் அவன்
அவன் யார்? நீயார்? பிரிவேது? (ஞாக.பா.)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.வாழ்க வையகம்.

# 5. யார் கடவுளின் அருள் பெற்றவர்கள்...

மதுராபுரி என்னும் அழகிய கிராமம் ஒன்று இருந்தது. இயற்கை எழில் கொஞ்சும் அக்கிராமத்திற்கு ஞானிகளும், முனிவர்களும் அவ்வப்போது வந்து செல்வார்கள்.

அவர்களில் ஒரு ஞானி மட்டும் மக்களின் பெரும் அன்புக்குரியவராக இருந்தார்.

அவர் ஊருக்கு வந்தாலே மக்கள் கூட்டம் அவரை சுற்றியே இருக்கும். கடவுளின் மறு உருவாக அவரை போற்றினார்கள்.

அந்த ஊரில் ஓர் செல்வந்தன் இருந்தான். அவன் தன்னை நாடி வருபவர்களுக்கு உதவி செய்வான். நேர்மை தவறாமல் இருப்பான்.

ஆனால் நல்லது செய்யும் தன்னை மக்கள் கடவுளாக பார்க்காமல் மனிதனாகவே பார்க்கிறார்களே என்று நினைப்பு அவன் மனதில் நீண்ட நாளாக இருந்து வந்தது.

சரி அடுத்தமுறை ஞானி வரும்போது இதைப் பற்றி பேச வேண்டும் என்று நினைத்தான்.

சில மாதம் கடந்தது. ஞானி மீண்டும் அந்த ஊருக்கு வந்தார். மக்கள் கூட்டம் கூட்டமாக அவரை தரிசித்து வந்தனர்.

இதைக் கேள்விப்பட்ட செல்வந்தன் ஞானியிடம் சென்றான். சாமி... நான் இந்த ஊரிலேயே மிகவும் வசதி படைத்தவன். நான் இல்லாதவர்களுக்கு உதவி செய்கிறேன்..

நான் கல்விசாலை அமைத்து தந்திருக்கிறேன்... நான் பல குடும்பங்களை வாழ வைத்திருக்கிறேன். நான் செய்த நல்லது இவ்வளவு இருக்கும்போது என்னை யாரும் உயர்வாக எல்லாம் நினைப்பதில்லை. நான் எப்போதும் உதவி செய்து கொண்டே இருக்கிறேன்.

ஆனால் நீங்கள் வெறும் வாய் வார்த்தையில் ஆறுதல் மட்டுமே சொல்கிறீர்கள். உங்களைக் கடவுளுக்கு நிகராக வணங்குகிறார்களே என்றான்.

ஞானிக்கு புரிந்துவிட்டது. புன்னகைத்தப்படி சரி.. உனக்கு வார்த்தையாகச் சொன்னால் புரியாது. என்னுடன் ஒருவாரம் இரு. நான் போகும் இடமெல்லாம் நீ வா. உனக்குப் புரியும் என்றார்.

ஐயையோ.. ஒரு வாரம் நான் இல்லையென்றால் நான் தொழில் செய்வது எப்படி.. நான் பிறருக்கு உதவுவது எப்படி.. நான்

இல்லையென்றால் இந்த ஊர்மக்கள் யாரிடம் உதவி கேட்பார்கள். நான் என்ன செய்வேன்.. சரி ஒருவாரம் தானே.. நான் வருகிறேன் என்றபடி அவருடன் சென்றான்.

வழியெங்கும் நான் இதைச் செய்வேன். அதைச் செய்வேன் என்று ஒரே நான் புராணம்தான்.

வழியில் ஞானியைக் கண்ட மக்கள் அவருக்கு வரவேற்பு கொடுத்தார்கள். அவர்கள் உதவி கேட்கும் முன்னே நான் தான் செய்வேன்... என்று ஓடோடி உதவி செய்தான்.

அவனைப் பார்த்த ஞானியிடம் என்ன பார்க்கிறீர்கள்? எல்லோரும் உங்களைவிட்டு என்னிடம் வருவார்களா என்றான் கர்வத்துடன்.. ஞானி எதுவும் பேசாமல் புன்னகையுடன் இருந்தார்.

ஞானி செல்லும் இடமெல்லாம் மக்களுக்கு உதவி செய்தபடி இருந்தான் செல்வந்தன். ஞானியிடம் விடைபெறும் தருணம் வந்தது.

மக்களிடம் உரையாற்றிக் கொண்டிருந்த ஞானியிடம் சொல்லிவிட்டு கிளம்பலாம். நான் இல்லாமல் ஊர்மக்கள் திணறியிருப்பார்கள் என்றபடி காத்திருந்தான்.

மக்கள் கூட்டம் கலையத் தொடங்கியது. அவனுக்கு உள்ளுக்குள் உற்சாகம். வந்திருந்த மக்கள் பெரும்பாலானவர்க்கு இவன் உதவி செய்திருந்தான். அவர்களது பாராட்டை கேட்க தயாராக இருந்தான்.

மக்கள் அவன் இருக்கும் பக்கம் கூட திரும்பவில்லை. மிகுந்த ஏமாற்றமடைந்த அவன் ஞானியிடம் சென்று நான் செய்த உதவிகளை மறந்து விட்டார்கள் பார்த்தீர்களா? உங்களுடன் இருந்த நாட்களில் நான் எவ்வளவு உதவிகளை செய்திருப்பேன்... என்றான்

நான்.. நான்.. என்கிறாயேப்பா... உன்னை செய்ய வைத்தவனும் செய்யப் பணித்தவனும் இறைவனல்லவா... நானின்றி ஓர் அணுவும் அசையாது என்கிறாயே.. எல்லாமே நான் தான் என்ற கர்வம் இருக்கும்வரை மக்களுக்கு நீ அந்நியனாய் தான் தெரிவாய்.

எல்லாம் இறைவன் அருள் என்று சொல்லிப்பார்
அவர்களுக்கு கடவுளின் அவதாரமாக தெரிவாய் என்றார்.

தலை கவிழ்ந்த செல்வந்தன் புரிந்தது சாமி... கடவுள் கொடுக்க நினைப்பதை என் மூலமாக செய்ய பணித்திருக்கிறார்.

அதைவிடப் பெரிய பேறு எதுவும் இல்லை. கடவுள் இட்ட பணிகள் இன்னும் இருக்கின்றன என்று ஆசி பெற்று திரும்பினான்.

உலகில் எதுவும் நிரந்தரமில்லை. நாமே நிரந்தரமாக தங்கமுடியாத இவ்வுலகிலும், மறு உலகிலும் நமக்கு துணை நிற்பது இறைவன் தான்.

தாம் நினைப்பதை தம்முடைய பக்தனைக் கொண்டு
செய்ய வைக்கும் இறைவனின் அருள் பெற்றவர்கள்
எல்லாமே இறைவன் செயல் என்பதை உணர்ந்தே
செயல்படுவார்கள்.

பேரும் குணமும் பிணிப்புறும்இப் பிறவிதனைத்
தூரும் பரிசு துரிசறுத்துத் தொண்டர் எல்லாம்
சேரும் வகையால் சிவன்கருணைத் தேன்பருகி
ஆருங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 563

- பெற்ற பேரும், உற்ற குணமும், மலக் குற்றங்களும் ஆகிய இவற்றைக் களைந்து,
- அடியார்கள் வந்து சேரும் வகையில்,
- சிவனது பேரருளாக விளங்கும் தேனினை உண்டு மகிழ்ந்து,
- தில்லையை ஆளும், ஆடல் வல்லானைப் பற்றிக் கொண்டேன்.

## அருள் நிலை – வேதாத்தரியம்

“இறையுணர்வால் எவ்வுயிரும்ஒன்றென் றாகும்.
ஈசனிலே தான். தன்னில்ஈசனான
இறையுணர்வே தத்துவத்தின் முடிந்த பேறு.

இப்பேறே அகத்தவத்தின் முடிவு மாகும்." (ஞாக.பா.1492)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வையகம்.

# 6. ஊரும் சதமல்ல, உற்றார் சதமல்ல

## (பற்றற்ற நிலை வேண்டும்.(நிலையாமை)

தேவை உணர்வாலும், தொடர்ந்து வந்த பழக்கத்தாலும் கிடைத்துள்ள சந்தர்ப்ப சூழ் நிலைகளாலும் அறிவின் வளர்ச்சிக் கேற்றவாறு ஒவ்வொரு மனிதனும் தேசம், மதம், சாதி, மொழி, இனம். பொருட்கள், பந்துக்கள் என்றவைகள் மீது உரிமை கொண்டாடுகிறான்.

அந்ததந்த எல்லையில்,குறுகியும் நிற்கிறான். இத்தகைய நினைவை நிலையை பற்று என்று சொல்லுகிறோம்.

ஆனால் உயிர் நிலையை அறிந்து கொண்ட பேரறிவின் சிகரமே பற்றற்ற நிலையாகும்." என்கிறார் அருட்தந்தை வேதாத்திரிமகரிஷி.

நாம் பிறந்த ஊர் நிலையனாது அன்று. விதிவசத்தால் வந்த உறவினர்களும் நிலையானவர் அல்லர்.

மிகவும் வருந்தி உழைத்துப் பெற்ற நற்பெயரும் (புகழும்) நிலையா னது அன்று. கட்டிய மனைவி நிலையானவள் அல்லள்



பெற்ற பிள்ளைகளும் நிலையானவர் அல்லர். அப்பிள்ளைகளால் பெறும் சிறப்பும் நிலையானாது அன்று.

ஈட்டிய செல்வம் நிலையானது அன்று. இந்த உலகத்தில் யாரும் நிலையானவர் அல்லர். நினது திருவடி மட்டுமே நிலையானது என்கிறார் பட்டினத்தார்.

ஊரும் சதமல்ல, உற்றார் சதமல்ல, உற்றுப் பெற்ற
பேரும் சதமல்ல, பெண்டிர் சதமல்ல, பிள்ளைகளும்
சீரும் சதமல்ல, செல்வம் சதமல்ல தேசத்திலே
யாரும் சதமல்ல நின்றாள் சதம் கச்சி ஏகம்பனே! (பட்.பா.17 திருஏகம்பமாலை.13)

என்னை அடிமையாகக் கொண்ட இறைவனே! என்னைப் பெற்ற தாயும் "பிணம்" என்று சொல்லி இகழ்ந்து கைவிட்டார்.

பொருளை என்னிடம் பெற்று வாழ்வை நடத்தி வந்த மனைவியும்"போ" என்று சொல்லி அழுது புலம்பி விட்டார்.

பெருமை பெற்ற பிள்ளைகளும் ஈமத்தை வலமாக வந்து கொள்ளி வைப்பதன் முன் குடம் உடைத்து விட்டார்.

எனவே இப்பொழுது உன்னைத் தவிர வேறு பற்று இல்லாதவன் ஆகிவிட்டேன் என்று புலம்புகிறார் பட்டினத்தார்.

"என்பெற்ற தாயரும் என்னைப் பிணம்என்று இகழ்ந்துவிட்டார்
பொன்பெற்ற மாதரும்போஎன்று சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பினவலம் வந்து குடம்உடைத்தார்
உன்பற்ற ஒழிய ஒருபற்றும் இல்லை உடையவனே" (பட்.பா.69)

**தாயுமானவர்** " நிலையாமையில் – யாக்கை நிலையாமை " என்ற பொருளில்----- பதினொரு பாடல்களைத் தாயுமானவர் பாடியுள்ளார்.

காயநிலை அல்லஎன்று காண்பார் உறங்குவரோ
தூயஅருள் பற்றாத் தொடர்வார் பராபரமே.146.

எடுத்த உடம்பு நிலையற்றது என்ற உண்மையை அறிந்தவர், உறக்கம் கொள்வாரோ? நின்னுடைய தூய திருவருளைப் பற்றாகப் பற்ற அல்லவா, அலைந்து திரிவர்.

பொய்எல்லாம் ஒன்றாய்ப் பொருத்திவைத்த பொய்உடலை
மெய்என்றால் மெய்யாய் விடுமோ பராபரமே.178.

நிலையில்லாத பொருள்கள் அனைத்தையும் ஒன்றுதிரட்டிச் செய்து அமைத்த பொய்உடலை மெய் என்று சொல்வதால் மட்டும், அது மெய்யாய் (நிலைத்ததா ய்) விடுமோ?

மின்அனைய பொய்உடலை மெய்என்று நம்பி ஐயோ
நின்னை மறக்கை நெறியோ பராபரமே.179.

மின்னல் போல் தோன்றி, விரைந்து மறையவுள்ள பொய் உடலை மெய் என்று நம்பி, ஐயகோ! நின்னை மறந்திருப்பது முறையாகுமோ?

நித்தியம்ஒன் று இல்லாத நீர்க்குமிழி போன்றஉடற்கு
இத்தனைதான் துன்பம்உண்டோ என்னே பராபரமே.180.

நிலைபேறு என்ற ஒன்று இல்லாத நீரில் தோன்றும் குமிழி போன்ற இந்த உடலுக்கு, இத்தனை துன்பம் ஏன் உண்டானது? இது என்ன அதிசியமா?

தேகம்இறும் என்றுஜடர் தேம்புவதுஎன் நித்திரையில்
ஊகம் அறிந்தால் பயம்தான் உண்டோ பராபரமே.181.

இந்த உடம்பு அழிந்து போகும் என்று அறிவற்றவர்கள் (ஜடர்கள்) புலம்பவது ஏனோ? உறங்கும் போது (சுழுத்தியில்) உடம்பு எங்கே

போனது என்பதை அறிந்து கொண்டால் பயம் உண்டாகுமோ?

ஏதைச் சுமையா எடுப்பார் எடுத்த உடல்
சேதம்உறின் யாது பின்னே செல்லும் பராபரமே.182.

எடுத்த இந்த உடம்பு அழிந்த பின்பு, வேறு எந்தவிதமான உடம்பைச் சுமையாக எடுக்கப் போகிறதோ? இந்த உடம்பு அழியும்போது. அதனுடன் இந்த உலகத்துப் பொருள்களில் எது உடன் செல்லும்?

தோல்பாவை நாலால் சுமைஆகும் ஜீவன்ஒன்றுஇங்கு
ஆர்ப்பால் எடுத்ததுஎவ ராலே பராபரமே.183.

தோலால் ஆன பொம்மை உடல், நாலுபேர் சுமக்கும் சுமையாக மாறும். சீவன் என்ற ஒன்று யாரிடமிருந்து வரவழைக்கப்பட்டது? வரவழைத்தவர் யார்?

நித்திரையில் செத்தபிணம் நேரும்உடற்கு இச்சைவையாச்
சுத்தர்களே நல்ல துறவோர் பராபரமே.197

மாயையால் ஏற்படும் மய க்கம் நீங்கி னவர், வேறு உலகப் பொருள்கள் எதனையும் விரும் பமாட்டார். அவர் அன் பின் திருவருளிலே திளைத்து நிற்பர்..

கட்டும் கனமும்அந்தக் காலர்வரும் போதுஎதிர்த்து
வெட்டும் தளமோ விளம்பாய் பராபரமே.283.

உறவு, செல்வம் முதலிய பந்தமும், செல்வாக்கும், அந்த எமனார் வரும்போது, எதிர்த்து நின்று, வெட்டி வீழ்த்தும் படை ஆகுமோ? சொல்லுவாயாக!

பூட்டுஅற்றுத் தேகம்அற்றுப் போகும்முன்னே நின்அருளைக்
காட்டத் தகாதோஎன் கண்ணே பராபரமே.295.

நரம்புக் கட்டுகள் தளர்ந்து, இந்த உடல் விழும் முன்பே, நினது திருவருளைக் காட்டி அருளினால், அதுஎன்ன தகாத செயல் என்று ஆகிவிடுமோ?

தேகாதி பொய்எனவே தேர்ந்தஉப சாந்தருக்கு
மோகாதி உண்டோ மொழியாய் பராபரமே.298.

உடல் முதலியன பொய் என்று அறிந்த நல்ல சாந்த குணம் உள்ளவர்க்கு, மோகம் முதலிய குற்றங்கள் உண்டாகுமோ? கூறுவாயாகா.

கொம்பில் அரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்து உடலம் மாண்டு இங்ஙன் போகாமே
நம்பும் என் சிந்தை நணுகும்வண்ணம் நான்அணுகும்
அம்பொன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 564

- மரக்கிளையில் அரும்பி, மொக்காகி, மலராகிக் காய்த்து, வீணே பழுத்து விழும் பழம் போல் இந்த உடம்பு முதுமை அடைந்து விழுந்து போகாத வகையில்,
- நம்பிக்கைக்கு உரிய என் மனம் நெருங்கும் வண்ணமே நானும் நெருங்கி,
- அழகிய தில்லைப் பொன்னம்பலத்தை ஆளும். ஆடல் வல்லானைப் பற்றிக் கொண்டேன்.

## நிலையாமையை நினைவிற் கொள் – வேதாத்திரியம்

“பிறப்பு இறப்பு நடுவே பூவலக வாழ்வு. இதை
மறப்பு நிலையில் உள்ள மதியின் போக்கே மாயை,”
(ஞாக.பா.1492)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வையகம்.

# 7. கொள்ளையாசை கொள்ளை போய்விட்டது.

ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதை.

ஒரு சீடன் தன் குருவிடம் சொன்னான். –

“சுவாமி, என்மீது என் மனைவிக்கு அளவில்லாத அன்பு. கொள்ளை ஆசை என்மீது அவளுக்கு இருக்கிறது. அது காரணமாகத்தான் நான் சன்னியாசம் பெறாமல் இருக்கிறேன்”.

சீடன் சொன்னதைக் குரு கேட்டார். அவருக்குச் சீடன் சொல்லும் காரணத்தில் உண்மை எதுவும் கிடையாது என்பது நன்றாகத் தெரியும்.

ஆகவே அவர், சீடன் நினைப்பதைப் போல உலக மக்கள் இல்லை என்பதை அவனாகவே உணர்ந்து கொள்ள வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க திருவுள்ளம் கொண்டார்.

அதன்படி குரு தமது சீடனுக்கு ஏதோ ஒரு இரகசிய யோக முறையைச் சொல்லிக் கொடுத்தார்.

தீடிரென்று ஒரு நாள் சீடனுடைய வீட்டில் ஓலமும் அழு குரலும் கேட்டன. வீடே அமளி துமளிப்பட்டது.

அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்னவோ ஏதோ என்று நினைத்து ஓடி வந்து பார்த்தனர்.

அங்கே ஓர் அறையில் சீடன் மூச்சுப் பேச்சில்லாமல் அசைவற்று ஒரு கற்சிலையைப் போல உட்கார்ந்திருந்தான்.

அவனது உடலும் அவயங்களும் இயல்புக்கு மாறாகப் புதுமயான வகையில் கோணிப் போயிருந்தன.

அவனை அந்த நிலையில் பார்த்த உறவினர்களும் மற்றவர்களும் அவனுக்கு உயிர் போய்விட்டதென்றே முடிவு செய்தார்கள்.

சீடனுடைய மனைவி ஒப்பாரியும் அலறலுமாக, “ஐயோ. என் பிராணநாதா! நீங்கள் எங்கே போய்விட்டீர்கள்? எங்களை எல்லாம் கைவிட்டுப் போய் விட்டீர்களே!

எங்களை எல்லாம் ஏமாற்றி விட்டுப் போய் விட்டீர்களே!" என்று என்ன என்னவோ சொல்லிக் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தாள். அழுதாள். புலம்பினாள். தேம்பினாள்.

இதனிடையில், உறவினர்கள் பிணத்தத் தகனம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

பிணத்தைச் சுடுகாட்டிற்குக் கொண்டு போவதற்காக ஒரு பாடையைக் கட்டிக்கொண்டு வந்தார்கள். அப்போது அவர்களுக்கு ஒரு சங்கடம் வந்தது.

சீடனின் உடல் கோணலான நிலைமையில் இருந்ததால், வாயிற் படி வழியாகப் பிணத்தைக் கொண்டுவர முடியாது நிலை ஏற்பட்டது.

ஆகவே ஒருவன் கோடரியைக் கொண்டு மரத்தாலான வீட்டின் நிலைப் படியை இடிக்க ஆரம்பித்தான்.

அது வரையிலும் துக்கம் தாங்காமல் தேம்பி தேம்பி அழுது கொண்டிருந்த சீடனின் மனைவி, கோடரிச் சப்தம் கேட்டதும் நிலைப்படி இருந்த இடத்திற்கே ஓடோடி வந்து விட்டாள்.

அங்கிருந்தவர்களிடம் அழுதுகொண்டே அவள், "என்ன விஷயம்? ஏன் நிலைப்படியை இடிக்கிறீர்கள்!" என்று விசாரித்தாள்.

அங்கிருந்தவர்களுள் ஒருவன், "உங்களுடைய கணவனின் உடல் கோணிப்போய் இருப்பதால், பிணத்தை வாயிற்படி வழியாக எடுத்து வர முடியாது.

ஆகவே நிலைப்படியைப் பெயர்க்க வேண்டியிருக்கிறது. அதைத் தவிர வேறு வழயில்லை" என்று அவளுக்குப் பதில் சொன்னான்.

இதை அவள் கேட்டவுடனே, "இல்லை இல்லை. இதை இப்போது இடிக்க வேண்டாம். நானோ விதவையாகி விட்டேன்.

என்னைக் காப்பாற்றுபவர் இப்போது யாருமில்லை. தந்தையை இழந்துவிட்ட என் குழந்தைகளை நான் காப்பற்றியாக வேண்டும்.

நிலைப்படியை நீங்கள் இப்போது இடித்து விட்டுப் போய்விட்டால், மறுபடியும் அதைப் பழுது பார்க்க முடியாது.

ஏதோ என் கணவருக்கு நேர வேண்டியது நேர்ந்துவிட்டது! வேண்டுமானால் பிணத்தின் கை கால்களை வெட்டி வெளியே கொண்டு போய் விடுங்கள்" என்ற சொல்லி விட்டாள்.

மனைவி அப்படிச் சொன்னவுடனனே, இதுவரையிலும் இறந்து விட்டவனைப் போல இருந்த சீடன் எழுந்து நின்றான். அவன் சாப்பிட்டிருந்த மருந்தின் வேகமும் இதற்குள்ளாகத் தணிந்து போயிருந்தது.

மனைவியைப் பார்த்து அவன், "அடி பாதகி! பெண்ணே, என் கை கால்களை வெட்ட வேண்டுமென்றா சொல்கிறாயா?" என்று கூவிக் கொண்டு வீடு வாசல்களைத் துறந்துவிட்டு அந்த நிமிடமே தன் குருவுடன் புறப்பட்டுப் போய்விட்டான்.

"நமது உலக ஆசைகைள் பூர்த்தி செய்வதில் ஈடுபட்டு அவற்றில் மூழ்கி அந்தகாரத்தில் கஷ்டப்பட்டாலும், "நாம் யார்? இவற்றை அனுபவிப்பது யார்?" என்ற கேள்வி எப்போதாவது ஒரு சமயம் நமது உள்ளத்தில் எழும். இந்தக் காலம் தான் இரகசியப் பொருளை விளக்கும் புனித நேரமாகும்."

மதிக்குந் திறல் உடைய வல் அரக்கன் தோள்நெரிய
மிதிக்கும் திருவடி என் தலைமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசுபாசம் ஒன்றும் இலோம் எனக்களித்துஇங்கு
அதிர்க்கும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 565

- எல்லோராலும் புகழப்படும் மனவலிமை உடைய, வலிய அசுரனாகிய இராவணனது தோள்கள் தெரியபடுமாறு. மிதித்த திருவடிகள் என் தலைமேல் பதிந்திருக்கிறது.
- அதனால் மிகும் இயல்பினை உடைய பதித்தன்மையும், பாசங்களும் மிகுதிப்படாமல், இல்லை என்று ஆயிற்று.

- அந்த இகழ்ச்சியோடு, ஆரவாரம் மிக்க தில்லையை ஆளும். ஆடல் வல்லானைப் பற்றிக் கொண்டேன்.

## ஆன்மீக அறிவு அமைதி நல்கும் – வேதாத்திரியம்

“உலகத்தில்அமைதியது உருவாக நிலைக்க,
 உயிரறிவு இறையுணர்வு கடமையறம் எங்கும்
பலநாட்டு மக்களது வாழ்வினிலே பரவி,
 பண்பாடாய் ஊடுருவி நிலைக்கும்முறை வேண்டும்.
சிலர்தலைவர். அரசியலார், பொருள்துறையார், மதத்தார்
